தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 30, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 13, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல் புண்ணென்று உணரப் படும்."*

ஒருவரின் கண்ணிற்கு ஆபரணமாக இருப்பது இரக்கம் என்னும் உயரிய பண்பாகும். அந்த இரக்கம் இல்லாத கண்கள் புண்கள் என்றே கருதப்படும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 469 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 470, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

470—

மின் கோட்டத்தைப் பிரித்தல்

***29017—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மே 13

(அ) புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்திலுள்ள அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலங்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் உருவாக்கிட, தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்) திருச்சி அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அக்கருத்துருவைப் பரிசீலனை செய்ததில், வாரிய வரையறைகளின்படி, அக்கோட்டத்தில் போதுமான உப கோட்டங்கள் இல்லை. தற்போது 5 உப கோட்டங்களும், 33 பிரிவு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. புதிய கோட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்றால், 3 உப கோட்டங்களும், ஒரு வருவாய்ப் பிரிவும், அதற்குண்டான பல்வேறு பதவிகளும் உருவாக்க வேண்டியுள்ளதாலும், இதற்கு வருடத்திற்கு 1 கோடியே 18 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினம் செய்யவேண்டி இருப்பதாலும், தற்போதுள்ள வாரிய நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலங்குடியில் ஒரு புதிய கோட்ட அலுவலகம் உருவாக்க, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவே புகழும் அன்னை சந்தியாவின் புதல்வியே! தமிழகத்திலே இருண்ட காலம், அயோக்கியர்கள் ஆண்ட காலம் என பல காலங்கள் உண்டு. ஆனால், இன்று நடப்பது அம்மா அவர்களின் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி)*

புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையைத் தரம் உயர்த்தியும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவும் ஆணை வழங்கியதற்காக புதுக்கோட்டை

2013 மே 13]

மாவட்ட மக்களின் சார்பிலும், என் சார்பிலும் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் மின் வாரியம் அறந்தாங்கி கோட்டத்தில் உள்ளது. எனது தொகுதியைச் சேர்ந்த மலையூர் பிர்கா மற்றும் கந்தர்வக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த ரெங்கநாதபுரம், ஆலங்குடி தொகுதியைச் சேர்ந்த வடகாடு ஆகிய பகுதிகளிலுள்ள பொதுமக்கள் அறந்தாங்கி செல்லவேண்டுமென்றால் குறைந்தபட்சம் 100 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி, வரும் நிதியாண்டில், ஆலங்குடியை மையமாகக்கொண்டு, புதிய கோட்டத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட நெறிமுறை இருக்கிறது. அதிலே, ஒரு கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றுசொன்னால், குறைந்தபட்ச தகுதிகள் அந்த விதிமுறைகளில் இருக்கின்றது. அந்த விதிமுறைகளின்படி இந்தக் கோட்டத்தைப் பிரிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமை, புதிய கோட்டத்தைப் பிரிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையில் இல்லை. ஏனென்றுசொன்னால், இதில் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூ.1,18,67,000 செலவிடவேண்டியிருக்கிறது. மேலும், ஒரு கோட்டத்தைப் பிரிக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 8 உப கோட்டங்கள் அங்கே இருக்கவேண்டும். ஆனால், இங்கு 5 உப கோட்டங்கள்தான் இருக்கின்றன. 3 உப கோட்டங்கள் அந்தப் பகுதியிலே புதியதாக உருவாக்கப்படவேண்டும். ஒரு புதிய கோட்டம் உருவாக்கினால், அதற்கு ஒரு வருவாய்ப் பிரிவும் உருவாக்கப்படவேண்டும். அப்படி உருவாக்குகின்றபோது,

[2013 மே 13

மொத்தம் 30 பணியாளர்கள் புதியதாக நியமிக்கப்படவேண்டும். Class-1 பணியாளர்கள்-1, Class-2 பணியாளர்கள்-4, Class-3 பணியாளர்கள்-17, Class-4 பணியாளர்கள்-2, களப் பணியாளர்கள் 6 என மொத்தம் 30 பணியிடங்களையும் உருவாக்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதி நிலைமை சீரடைந்ததற்குப் பின்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று புதுக்கோட்டையிலுள்ள அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை ஏற்று வருங்காலத்தில் ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும் என்ற நல்ல பதிலை கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கணை தொடுக்கும் முன்னே கனிகள் விழும்' அற்புதத்தைப் பெற்ற எங்கள் அற்புதத்தின் அற்புதமான மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு வணங்கி, ஒரு சிறிய விளக்கத்தை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய மின்பகிர்மான கோட்டத்தில் அறந்தாங்கி கோட்டம்தான் பெரிய அளவிலே இருக்கிறது. 5 வருவாய் வட்டங்களை உள்ளடக்கியது. 4 தொகுதிகளை உள்ளடக்கியது. 45 உதவிப் பொறியாளர்கள் அங்கே பணியில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 5 உப கோட்டங்கள் இருப்பது

2013 மே 13]

உண்மைதான். ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு 5 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதேநேரத்திலே 2 இலட்சத்திற்கும் மேலான இணைப்புகளைக்கொண்ட கோட்டம் அது. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால், வேளாண்மைத் தொழிலுக்காக விவசாயிகள் அங்கே 30,000 இணைப்பைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, இவ்வளவு பரந்த இடமான அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆலங்குடியில் அமைக்க வேண்டுமென்பது நீண்ட நெடுநாளைய கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அட்சய திருதியை. இந்த நாளிலே பொன் வாங்கினாலும், பொருள் வாங்கினாலும், வளம் பெருகுமென்று ஆன்மிகவாதிகள் நம்புகிறார்கள். நாங்களும் நம்புகிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நன்னாளிலே, அமுதசுரபியாக இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டத்தினுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று நல்ல நாள் என்கிறார். ஏற்கெனவே இந்த நல்ல நாளிலே நல்ல செய்தியைத்தான் சொல்லியிருக்கிறோம். மின்சார வாரியத்தின் விதிமுறைகள் இடம் தரவில்லையென்றாலும்கூட, நிதி நிலைமை சீரடைந்ததற்குப் பின்பு நிச்சயமாக அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத்தான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இதை உடனடியாக செய்ய வேண்டுமென்று சொன்னால், விதிமுறைகளையெல்லாம் திருத்தியாக வேண்டும். ஒரு கோட்டத்தைப் பிரிப்பதற்கு வேண்டிய முன்தகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அந்த அடிப்படை தகுதிகளையெல்லாம் மாற்றியமைக்கவேண்டும். இப்படிப்பட்ட நிருவாகப் பணிகளெல்லாம் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இது பெரிய கோட்டமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்திலே அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் தேவையோ, என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ தேவைப்பட்டால் அந்த விதிமுறைகளையெல்லாம் சற்று தளர்த்தி, வாரியத்தின் நிதி நிலைமை சீரானவுடன், அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 471, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

471—

குடிநீர் வழங்கல்

***18085—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி பகுதியில் போதுமான அளவு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மேட்டூர் தொகுதியிலுள்ள பி.என். பட்டி பேரூராட்சிக்கு, பி.என். பட்டி- வீரக்கல்-புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காடையான்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலமாக நாளொன்றுக்கு 20.20 இலட்சம் லிட்டர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பி.என். பட்டி பேரூராட்சியில் 27 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்கள்மூலம் நபர் ஒருவருக்கு 80.63